
| Article Date | Headline / Summary | Publication |
| --- | --- | --- |
| 22 Mar 2026 | Medical Insurance - Do You Know what income tax benefits you shouldn't miss? | Nanayam Vikatan |





# மருத்துவக் காப்பீடு... தவறவிடக் கூடாத வருமான வரி சலுகைகள் என்னென்ன தெரியுமா?

தவிர்க்க முடியாத சில செலவுகளில் மருத்துவச் செலவுகளும் அடங்கும். இன்றைய கால கட்டத்தில் மருத்துவச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், மருத்துவ காப்பீடு (*Health Insurance*) என்பது ஓர் அவசியமான நிதி பாதுகாப்பு விஷயமாக மாறியுள்ளது எனலாம். மருத்துவக் காப்பீடு எடுப்பதன் அவசியத்தைப் பெரும்பாலானோர் உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

**அமர்நாத் சக்சேனா,**
முதன்மை தொழில்நுட்ப அதிகாரி,
பஜாஜ் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெட்



### மருத்துவச் செலவுகளால் வறுமையில் வாடும் குடும்பங்கள்!

மத்திய அரசின் தேசிய மருத்துவக் கணக்கு (*National Health Account*) அமைப்பு வெளியிட்டுள்ள தகவலின் படி, இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் 3% முதல் 7% வரையிலான குடும்பங்கள் அதிக மருத்துவச் செலவுகளால் வறுமைக் கோட்டுக்குக் கீழ் தள்ளப் படுகின்றன. குறிப்பாக, கிராமப்புற மற்றும் பொருளாதார ரீதியாக பலவீனமான குடும்பங்கள் இதனால் அதிகமாக பாதிக்கப்படுகின்றன.

### போதுமான அளவுக்கு மருத்துவக் காப்பீடு!

குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ அவசர நிலைகள், விபத்து பாதிப்பு போன்றவை எப்போது வேண்டு மானாலும் உருவாகக்கூடியவை. கோவிட் 19 பாதிப்பின் போது மருத்துவக் காப்பீடு இல்லாத குடும்பங் களில் பலர் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் பலர், லட்சக்கணக்கான தொகையை அவர்களின் சேமிப்பிலிருந்துதான் செலுத்தியிருக்கிறார்கள்.

அத்தகைய சூழ்நிலைகளில் குடும்பத்தின் சேமிப்புகள், முதலீடுகள், சொத்துகள் திடீரென கரைந்து போகாமல் இருக்க, போதுமான அளவு மருத்துவக் காப்பீடு அவசியம். இது ஒரு நிதிப் பாதுகாப்பு மட்டுமல்லாமல், வருமான வரிச்சலுகை வாய்ப்பு களையும் வழங்குகிறது.

### மருத்துவக் காப்பீட்டுக்கு வரிச்சலுகை பெற எந்த சட்டப்பிரிவு?

இந்திய வருமான வரிச் சட்டப் பிரிவு 80டி (*Section 80D*) படி, மருத்துவக் காப்பீட்டு பாலிசிக்குச் செலுத்தும் பிரீமியத்துக்கு, வரிச் சலுகை கோரலாம்.

> **பிரிவு 80D-யின் கீழ், தடுப்புச் மருத்துவப் பரிசோதனைக்காக செலுத்தப்படும் தொகைக்கும் நிதியாண்டில் ரூ.5,000 வரை வருமான வரிச் சலுகை பெறலாம், இதற்கான ஆதார ஆவணங்கள் கட்டாயம் இருக்க வேண்டும்!**

ஒரு நிதியாண்டில் தனிநபர் ஒருவர் தன்னையும், வாழ்க்கைத் துணையையும், சார்ந்திருக்கும் குழந்தை களையும் உள்ளடக்கிய மருத்துவக் காப்பீட்டுக்காக செலுத்திய பிரீமியத்துக்கு அதிகபட்சமாக ரூ.25,000 வரை கழிவு (*Deduction*) பெறலாம். அதுவே, அந்த நபர் மூத்த குடிமகன் என்றால், இந்த வரம்பு ரூ.50,000 ஆக உயர்கிறது.

மேலும், பெற்றோருக்காக தனியே செலுத்தப்படும் மருத்துவக் காப்பீட்டு பிரீமியத்துக்கும் பிள்ளைகள் தனியாக வருமான வரிச் சலுகை பெறலாம். பெற்றோர் 60 வயதுக்கு குறைவானவர்களாக இருந்தால் ரூ.25,000 வரையும், அவர்கள் மூத்த குடிமக்களாக இருந்தால் ரூ.50,000 வரையும் கழிவு பெறலாம்.

தனிநபரும் அவர்களின் பெற்றோர் களும் மூத்த குடிமக்களாக இருந்தால், ஒரு நிதியாண்டில் மொத்தமாக ரூ.1,00,000 வரை பிரிவு 80D-யின் கீழ் வரிச்சலுகை பெற முடியும்.

### காப்பீடு இல்லாத மூத்த குடிமக்களுக்கு மருத்துவச் செலவு கழிவு!

மூத்த குடிமகனான பெற்றோருக்கு மருத்துவக் காப்பீடு இல்லாத நிலையில், அவர்களுக்காக செலவிடும் மருத்துவச் செலவுகளுக்கும் ரூ.50,000 வரை கழிவு பெறலாம்.

ஆனால், இங்கு முக்கியமான நிபந்தனை என்ன வென்றால், அந்தச் மருத்துவச் செலவுகள் பணமாகச் செலுத்தப்படக் கூடாது. யு.பி.ஐ (*UPI*), டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, வங்கிப் பரிமாற்றம் அல்லது




காசோலை மூலம் செலுத்தப்பட வேண்டும்.

மருத்துவர் ஆலோசனைக் கட்டணம், மருந்துகள், மருத்துவமனைச் செலவுகள் போன்றவை இந்தக் கழிவுக்குத் தகுதியான செலவுகள்.

**தடுப்பு மருத்துவப் பரிசோதனை!**

பிரிவு 80D-யின் கீழ், தடுப்பு மருத்துவப் பரிசோதனைக்காக *(Preventive Health Check-up)* செலுத்தப்படும் தொகைக்கும் நிதியாண்டில் ரூ.5,000 வரை வருமான வரிச் சலுகை பெறலாம். இதற்கான ஆதார ஆவணங்கள் கட்டாயம் இருக்க வேண்டும்.

மருத்துவக் காப்பீட்டுக்கான பிரீமியத்தைப் பணமாகச் செலுத்தாமல், டிஜிட்டல் அல்லது வங்கி வழியாகச் செலுத்தினால்தான் வருமான வரிச் சலுகை கிடைக்கும். மேலும், பிரீமியம் செலுத்தியதற்கான ரசீதுகளைப் பத்திரமாக வைத்திருப்பது அவசியம்.

வருமான வரிக் கணக்கின்போது மருத்துவக் காப்பீட்டு பிரீமியம் செலுத்தியதற்கான ரசீதைப் பாதுகாப்பாக வைத்திருப்பது அவசியம். வருமான வரிக் கணக்குத் தாக்கலின்போது யார் பெயரில் பாலிசி இருக்கிறது என்ற விவரங்கள், பாலிசி எண், ரசீது எண் உள்ளிட்டவற்றைக் கொடுக்க வேண்டி வரும்.

**பழைய வரி முறை Vs புதிய வரி முறை**

இந்த வருமான வரிச் சலுகைகள் நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போல் அனைத்தும் பழைய வருமான வரி முறையில் *(Old Tax Regime)* மட்டுமே கிடைக்கும். 2023-24 நிதியாண்டில் அரசு மேற்கொண்ட மாற்றங்களின் காரணமாக, புதிய வரி முறையில் பல கழிவுகள் நீக்கப்பட்டுள்ளன. அதில் பிரிவு 80D-யின் கீழ் வழங்கப்பட்ட வரிச் சலுகையும் அடங்கும்.

எனவே, பிரிவு 80D-யின் நன்மைகளைப் பெற விரும்புவோர், வருமான வரி தாக்கல் செய்யும்போது பழைய வரி முறையைத் தேர்வு செய்வது அவசியம். அதேநேரத்தில், புதிய வரி முறையைத் தேர்வு செய்யும்பட்சத்தில் வருமான வரிச் சலுகை கிடைக்காது என்றாலும், மருத்துவக் காப்பீடு பாலிசி எடுக்காமல் இருக்கக் கூடாது. குடும்பத்தினரின் விலை மதிப்பற்ற உயிரை காப்பாற்றவும், இது வரைக்கும் சேர்த்திருக்கும் செல்வத்தைக் காப்பாற்றவும் மருத்துவக் காப்பீடு அவசியம். சில ஆயிரம் ரூபாய் பிரீமியம் செலுத்துவது மூலம், பல லட்சங்களை மிச்சப்படுத்த முடியும்.

**மருத்துவக் காப்பீடு - ஆரோக்கியமும் செல்வமும் காக்கும் முதலீடு!**

ஒவ்வொரு நபரும் மருத்துவக் காப்பீடு வைத்திருப்பது காலத்தின் தேவை. இது மருத்துவ அவசர நிலைகளில் நிதிப் பாதுகாப்பை வழங்குவதோடு, வருமான வரிச் சலுகை மூலம் கூடுதல் சேமிப்பையும் உருவாக்குகிறது.

பிரிவு 80D-யின் வரம்புகள் மற்றும் நிபந்தனைகளைச் சரியாகப் புரிந்து கொண்டு செயல்பட்டால், ஒருவர் தனது வரிச்சுமையைக் குறைத்து, தன்னையும் குடும்பத்தையும் முழுமையான மருத்துவப் பாதுகாப்புடன் காக்க முடியும்.

'மருத்துவக் காப்பீடுதானே... அப்புறம் பார்க்கலாம்' என இப்போதும்கூட சிலர் தள்ளிப்போட்டு வருவதைப் பார்க்க முடிகிறது. அலட்சியம் காட்டாமல் இன்றே மருத்துவ காப்பீடு எடுப்பது, நாளைய ஆரோக்கியமான மற்றும் நிதிப் பாதுகாப்பான வாழ்க்கைக்கான உறுதியான அடித்தளம் என்பதைப் புரிந்துகொண்டு உடனே எடுங்கள்!